நாள் 04.03.2026

CC 318/2022

அசா 1

பெயர் -சாந்தி

க/பெ- சக்திவேல்

வயது 47

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of March 2026.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1, இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள சத்தியபிரமாண வாக்குமூலத்தில் அடங்கியுள்ள சங்கதிகளைத்தான் புகாரிலுரும் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எதிரியை எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் அவர் கடன் வசூல் செய்வதற்கு வருவார் அதன் மூலம் பழக்கம். நான் எதிரியிடம் கடன் வாங்கியிருந்தேனா என்றால் அவ்வாறு இல்லை. எதிரி வேலை பார்த்த வங்கி கடன் வசூல் செய்வதற்கு எங்கள் ஊருக்கு வருவார் அதன் மூலம் பழக்கம். எந்த வங்கியின் கடன் தொகைகள் வசூல் செய்யும் வேலையை எதிரி பார்த்தார் என்றால் வெரிடாஸ் என்ற வங்கியில் வேலை பார்த்து வந்தார். எந்த வருடத்தில் இருந்து எதிரி அங்கு வேலைக்காக எங்கள் ஊருக்கு வந்தார் என்றால் 2021 ம் வருடத்தில் இருந்து வந்தார்.

2. பொதுவாக கைக்கடனானக ரூபாய் 1,000/-, 2,000/- கொடுப்பார்கள் நான் கூறுவதுபோல் ரூபாய் 2 லட்சம் கைக்கடனாக யாரும் கொடுக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. எதிரியிடம் ஆதாரமாக என்ன ஆவணம் நான் வாங்கினேன் என்றால் ஒரு காசோலை வாங்கினேன். எதிரியிடம் வேறு எந்த ஆவணம் வாங்கினேன் என்றால் ஆதார் அட்டையின் நகல் மட்டுமே வாங்கினேன். எதிரியின் வங்கி கணக்கில் பணமில்லை என்பதை தெரிந்துகொண்டு நான் வழக்கு காசோலையை வங்கியில் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல,

3. எதிரி கொடுத்ததாக கூறப்படுகின்ற காசோலையில் எதிரியின் பெயர் காசோலையின் வலது பக்க கீழ் பகுதியில் தட்டச்சு செய்யப்பட்டு இருந்ததா என்றால் அதை நான் சரியாக கவனிக்கவில்லை. எதிரி கொடுத்ததாக கூறப்படும் காசோலையின் IFSC , MICR, RTGS எண்களை கூற இயலுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காசோலை என்பதை பற்றிய புரிதலே எனக்கு இல்லை என்றும் அதனால் எதிரிக்கு எதிராக நான் தாக்கல் செய்துள்ள புகார் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

4. எதிரி எனக்கு பதில் அறிவிப்பு கொடுதத பின்தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை அவர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது வழக்கறிஞரைத்தான் கேட்கவேண்டும். ஒப்புதல் அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இந்திய அஞ்சல் டிராக் வளைதளத்தில் இருந்து எடுக்கப்பட்ட தகவலைத்தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் வழக்கறிஞரைத்தான் கேட்கவேண்டும்.

5. இந்திய அஞ்சல் வளைதளத்தில் இருந்து எடுக்கப்பட்ட தகவலில் ஒரு நபருக்கு அனுப்பிய தபால் அயிட்டம் டெலிவர்ட் என்றுதான் குறிப்பிடப்படும் என்றும் வழக்கறிஞர் அறிவிப்பு அந்த நபருக்கு சார்பு செய்யப்பட்டது என்று இருக்காது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் சேலை வியாபாரம் மற்றும் உணவகம் வைத்து நடத்தி வருகிறேன். நான் செய்யும் தொழிலுக்கு வருமானவரி எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிரியைத்தவிர வேறு நபர்கள் மீது இந்த நீதிமன்றததில் புகார் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

6. எதிரி நிதி நிறுவனத்தில் வேலை பார்த்து வருவதால் ஒரு காசோலை கொடுததால் என்ன விளைவு ஏற்படும் என்பது அவருக்கு தெரியும் என்றும் அதனால் அவர் எனக்கு எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி எந்த ஒரு காசோலை மோசடி செயலும் செய்யவில்லை என்றும் அதனால் நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எதிரிக்கு என்னை யார் என்றே தெரியாது என்றாலும் வேறு ஒரு நபரின் கடனை வசூல் செய்வதற்காக காசோலையை என் பெயரில் தாக்கல் செய்து பொய்யான புகார் எதிரிமீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞிரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.